Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 53 of 2024**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.3**

Defence

Court

| | |
|---|---|
| Name | தட்சிணாமூர்த்தி |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 23rd day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 23rd day of September 2025.**

**1 மற்றும் 4 எதிரி இறந்து விட்ட காரணத்தினால் வழக்கு அற்று போய்விட்டது. எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை,. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் வன்னியர்புரம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் பட்டாளி மக்கள் கட்சியில் இருந்தேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு கீரப்பாளையத்தில் இருந்து ராமாபுரம் நோக்கி TN 31 AD 2929 எ ன்ற ஒரு காரில் சென்ற போது இரவு சுமார் 8.00 மணியளவில் ராமபுரம் பாலம் அருகே வந்த போது இருட்டில் கற்கள் கார் மீது வீசப்பட்டது., அதில் என்னுடைய கார் சேதம் அடைந்தது. எங்கள் இயக்கத்தில் மாநில தலைவர் அ.சா.1 திருப்பாதிரிபுலியுர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். யார் சேதப்படுத்தினார்கள் என்று இருட்டாக இருந்ததால் எனக்கு தெரியவில்லை,. போலிசார் இது குறித்து விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை**:

கடந்த 10.02.2013 இரவு சுமார் 9.50 மணியளவில் எனக்கு சொந்தமான TN 31 AD 2929 என்ற காரில் இராமாபுரம் பாலத்தின் அருகே சென்ற போது வேல்முருகன் மற்றும் கண்ணன் ஆகியோரது துண்டுதலின் பேரில் எதிரிகள் எனது வாகனத்தை இரும்பு பைப் மற்றும் உருட்டுகட்டைகள், கடப்பாறை, பெட்ரோல் வெடிக்குண்டு போன்ற பயங்கர ஆயுதங்களுடன் வழிமறித்து என்னையும் என்னுடன் வந்தவர்களையும் கொலை செய்யும் நோக்கோடு தாக்கியதாகவும், வாகனங்களை

சேதப்படுத்தியதாகவும், சேதத்தின் மதிப்பு ரூ.2,55, 000/- என்று கூறி திருப்பாதிரிபுலியுர் காவல் நிலையத்தில் பாதுகாப்பு கோரியதாகவும் தற்சமயம் எதிரிகள் கட்சிக்காரர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

எதிரிகள் எங்கள் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற காரணத்தினால் அவர்கள் மீது சந்தேகப்பட்டு புகாரில் அவர்கள் பெயர்களை சேர்த்து கொடுத்தோம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*
*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 53 of 2024**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.2**

Defence

Court

| | |
|---|---|
| Name | முத்தகிருஷ்ணன் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 23rd day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 23rd day of September 2025.**

**1 மற்றும் 4 எதிரி இறந்து விட்ட காரணத்தினால் வழக்கு அற்று போய்விட்டது. எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை,. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் கடலூர் ஈச்சாங்காட்டில் வசிக்கிறேன். நான் பட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்தவர். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு இரவு சுமார் 8.00 மணியளவில் சுமார் 7, 8 கார்களில் கட்சிக்காரர்கள் கீரப்பாளையத்தில் இருந்து ராமாபுரம் நோக்கி சென்று கொண்டிருந்தோம். எனக்கு சொந்தமான Scropio TN 31 AD 2929 என்ற வாகனத்தில் நானும் எனது கட்சிக்காரர்களும் வந்துக்கொண்டிருந்தோம். ராமாபுரம் ஓடை அருகே வரும் போது கும்பலாக வந்த நபர்கள் எனது வாகனத்தில் கல் ஏறிந்து சேதப்படுத்தினார்கள். அப்போது இருட்டாக இருந்தது. யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. அ.சா. 1 இது குறித்து திருப்பாதிரிபுலியூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இது குறித்து போலிசார் விசாரித்தார்கள். எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள்.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை**:

கடந்த 10.02.2013 இரவு சுமார் 9.50 மணியளவில் எனக்கு சொந்தமான TN 31 AD 2929 என்ற காரில் இராமாபுரம் பாலத்தின் அருகே சென்ற போது வேல்முருகன் மற்றும் கண்ணன் ஆகியோரது துண்டுதலின் பேரில் எதிரிகள் எனது வாகனத்தை இரும்பு பைப் மற்றும் உருட்டுகட்டைகள், கடப்பாறை, பெட்ரோல் வெடிக்குண்டு

போன்ற பயங்கர ஆயுதங்களுடன் வழிமறித்து என்னையும் என்னுடன் வந்தவர்களையும் கொலை செய்யும் நோக்கோடு தாக்கியதாகவும், வாகனங்களை சேதப்படுத்தியதாகவும், சேதத்தின் மதிப்பு ரூ.2,55, 000/- என்று கூறி திருப்பாதிரிபுலியுர் காவல் நிலையத்தில் பாதுகாப்பு கோரியதாகவும் தற்சமயம் எதிரிகள் கட்சிக்காரர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

எதிரிகள் எங்கள் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற காரணத்தினால் அவர்கள் மீது சந்தேகப்பட்டு புகாரில் அவர்கள் பெயர்களை சேர்த்து கொடுத்தோம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*

*I Additional District Judge*

*Cuddalore.*